www.newwisdomministries.com

கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்

1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி

இணைய வார இதழ்



01.05.2022 ஞானம் 5 – ஒலி 18



# சுத்தும் சுவர்க்கம் சேர்க்கும்

# பழி பாவத்துக்கு அஞ்சுவோரே பரலோகம் சேர்வர்



அருட்பணி.சைமன் பீட்டர்

இயேசு கிறிஸ்துவில் பிரியமான சகோதர, சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் இயேசுவின் பரிசுத்த நாமத்தில் ஞான ஒலி இணைய வார இதழின் மூலமாக என் அன்பான வாழ்த்துக்களையும், வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நாம் அனைவரும் மனித நிலையிலிருந்து புனித நிலைக்கு உயர்வதே ஆன்மீகம் நம்மிடம் எதிர்பார்க்கின்ற ஒன்று. அதுவே அனைத்து மார்க்கங்களும் கற்றுத்தருகின்ற பாடமாகும். புனிதமாக்கும் செயல் தனிமனித கடமை. அவரவரின் புனிதம் அவரவரின் சுயவிருப்பத்தைப் பொறுத்ததாகும். இதற்காக யாரும் யாருக்காகவும் செயல்படவும் முடியாது.

மண்ணில் விழுந்த விதை அதுவாகவே வளர்ந்து விருச்சமாவதைப்போலத்தான் மனிதப் புனிதமும்.

தீதும் நன்றும் பிறர்தர வாரா என்ற முதுமொழி இதை தயவுதாட்சண்யமின்றி கூறுகின்றது.

அன்று இருந்த ஆன்மீகம் இன்று இல்லை. மனித புத்தி எது தவறு, எது பாவம், எது தீமை என்ற வரையறையை தன் வசதிக்கும், விருப்பத்திற்கும் ஏற்ப மாற்றியமைத்துள்ளது.

ஒரு காலத்தில் மது அருந்தியவர் ஊருக்குள் வரும்போது தலையில் முக்காடிட்டு ஒளிந்து ஒளிந்து வருவார். இன்றோ பட்டவர்தனமாக கூடிக் குடித்து கும்மாளமிடும் போக்கு பொழுதுபோக்காகவும், நடைமுறை கலாச்சாரமாகவும் மாறிவிட்டது. லஞ்சம் வாங்கியது பெருத்த அவமானமாக இருந்தது, ஆனால் இன்று அதை ஸ்பீட் மணி அதாவது ஒரு செயலை மிக விரைவாக ஒருவர் செய்ய கொடுக்கப்படும் ஊக்கத் தொகையாக மாறிவிட்டது. இன்று ஆணுக்கு நிகராக பெண்களும் புகைக்கலாம், குடிக்கலாம் என்ற போக்கு வந்துவிட்டது. புகைபிடிக்கும் பழக்கமுள்ள தந்தை, தன் மகன் புகை பிடிப்பதைக் கண்டும் காணாதது போல இருக்க வேண்டிய நிலை இன்று.

அலைபேசி வந்த பிறகு, தவறுகள், நியாயப்படுத்தப்படும் போக்கு அதிகமாகியுள்ளது. தவறுகளும் நவீனமாகியுள்ளது. பாவத்தைப் பற்றிய அச்சம் அற்றுப்போய்விட்டது. இதெல்லம் ஒரு தவறா? சரி அப்படியே அது தவறென்றால் இப்ப என்ன குடியா முழுகிப்போச்சு, என்றாகிப்போச்சு. ஒரு தவறான செயல் இருவருக்கும் விருப்பமாயிருந்தால் அது தவறே அல்ல என்ற போக்கு, சமூகத்தின் மீது கொடூரம் படர்ந்துள்ளது என்பதைக் காட்டுகின்றது.

இதெல்லாம் ஒரு பாவமே இல்லை என்ற மனநிலைதான் தனிமனித ஒழுக்கத்திற்கும், புனிதநிலைக்கும் மிகப்பெரிய ஆபத்தாக உள்ளது. கோடிக்கணக்கான மக்கள் ஒரு தவறை சரி என்று ஒத்துக் கொண்டாலும் தவறு தவறுதான். இதுதான் பிரபஞ்ச விதி. விண்கோள்கள் கொஞ்சம் விதியை மீறினால் என்ன பிரலயம் ஏற்படுமோ அதேபோல்தான் ஒழுக்க விதிகள் மீறுகின்றபோதும் நடக்கும்.

இதெல்லாம் போதிக்கும்போது புரியாது, ஆனால் பாதிக்கும்போதுதான் புரியும். இக்கால சந்ததி பட்டுத்தான் தெரிந்து கொள்ளும் சிற்றின்ப வேட்கை கொண்ட இனமாகியுள்ளது.

இருந்தாலும் இறைவன் நம்மை புனிதத்திற்கு அழைத்துக் கொண்டேயிருக்கின்றார். மரம் சும்மாயிருந்தாலும், காற்று அதைச் சும்மா இருக்கவிடுவதில்லை என்று சொல்வதுபோல, மனிதன் என்னதான் தான் புனிதனாக இருப்பதாக நினைத்தாலும், இந்தப் பொதுவெளி அவனைத் தாக்கிக்கொண்டேயிருக்கும். அவன்மீதும், அவனுக்குள்ளும் தன் பாதிப்பை புகுத்தி அவனை மாசுவடையச்செய்துகொண்டேயிருக்கின்றது.

ஒருவன் தன்னை ஒவ்வொரு வினாடியும் சுத்திகரித்துக் கொண்டேயிருக்க வேண்டும். தனக்குள் வந்து கொண்டேயிருக்கும் ஐம்புலன் அனுபவங்களில்,

அறிவில் உள்ள தேவையற்றதை நீக்கிக்கொண்டேயிருக்க வேண்டும். தேவையானதை தக்கவைத்துக் கொண்டும் அதை வளர்த்தும், அதன்படி தன் வாழ்வை புனிதப்படுத்தி வளப்படுத்திக் கொண்டேயிருக்க வேண்டும். அந்தத் தொடர் புனிதப்படுத்துதல் மிகமிக அவசியமாகின்றது. அதுவும் எதுவும் தவறில்லை என்ற சித்தாந்தம் கொண்ட இந்த உலகில் மகிவும் அத்யாவசியமானது.

ஒருமுறை குருகுல படிப்பை முடித்தவிட்ட ஒரு மாணவன் தன் குருவிடம், இறுதியாக நான் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் ஏதாவது உண்டா? என்று கேட்டான். அதற்கு குரு ஒருவரின் விலாசத்தை கொடுத்து அவரிடம் ஒரு மாசம் தங்கி வேலை செய்ய அனுப்பினார். அந்த மாணவன் அவரிடம் சென்றபோது அவனின் குரு கொடுத்த கடிதத்தைப் படித்துவிட்டு, தான் செய்வதை நன்றாகக் கவனி என்று மட்டும் சொல்லிவிட்டுத் தன் உணவு விடுதிப் பணிகளில் மும்முரமானார். அந்த மாணவன் அவர் செய்வதனைத்தையும் உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்தார். அவர் தினமும் மாலையில் அவர் அனைத்துப் பாத்திரங்களனைத்தையும் நன்றாகக் கழுவி அடுக்கி வைத்தார். பிறகு மறுநாள் காலையில் உணவு விடுதியைத் திறந்தவுடன், அந்தப் பாத்திரங்கள் அனைத்தையும் மீண்டும் சுத்தமாகக் கழுவிப் பயன்படுத்தினார்.

அந்த மாணவனுக்கு குழப்பம், என்னயிது, அவர் நேற்று இரவுதானே அந்தப் பாத்திரங்களைக் கழுவி வைத்தார். ஆனால் இன்று காலையில் அதே பாத்திரங்களை மீண்டும் கழுவுகின்றாரே என்று. இருந்தாலும் அவரிடம் எதுவும் கேளாமல் அவரின் செயல்கள் அனைத்தையும் கவனித்துக் கொண்டேயிருந்தான். அந்தக் கடைக்காரர் இரவிலும், மறுநாள் காலையிலும் பாத்திரங்களைக் கழுவுவதை வாடிக்கையாகக் கொண்டிருந்தார். இவ்வாறு ஒருமாதம் நடந்ததை அவன் கவனித்தான். அதன்பிறகு அவனுக்கு சலிப்பு ஏற்பட்டுவிட்டது. ஆகவே அவன் அந்தக் கடைக்காரரிடம் சென்று தான் தன் குருகுலத்திற்குப் போகவேண்டும், இங்கு உங்களிடம் கற்றுக் கொள்வதற்கு எதுவும் புதிதாய் இல்லை என்று சொன்னான். அதற்கு அந்தக் கடைக்காரர் சிரித்துக் கொண்டு அவனுக்கு விடை கொடுத்து அனுப்பி வைத்தார்.

அந்த மாணவன் தன் குருவிடம் வந்து, குருவே அவர் தினமும் மாலையில் பாத்திரங்களைக் கழுவுகிறார். ஆனால் மறுநாள் காலையில் முதல் வேளையாக அந்தப் பாத்திரங்களை மீண்டும் கழுகின்றார். சுத்தாமாய் இருக்கும் அந்தப் பாத்திரங்களையே மீண்டும் மீண்டும் கழுவுகின்றார். நான் அவரைப் பார்த்ததில் இதைத் தவர வேறு ஒன்றையும் புதிதாய் நான் பார்க்கவில்லை என்று சொன்னான்.

அதற்கு அந்தக் குரு, நான் நினைத்ததைப்போல நீ மிகச் சிறந்த ஒரு பாடத்தை கற்றுக் கொண்டாய். இப்போது நீ முழுமையான வாழ்க்கைப் பாடத்தைக் கற்றுக் கொண்டாய் இனி இந்த உலகத்தில் வாழ முழுத் தகுதியையும் பெற்றுவிட்டாய் என்றார். அந்த மாணவன் குழம்பி, அது என்ன பாடம் என்று குருவிடம் கேட்டான்.

அந்த குரு சொன்னார் அந்தக் கடைக்காரர் மாலையில் கழுவிய பாத்திரங்களை மறுநாள் மீண்டும் எதற்காக கழுவினார் என்றால். கழுவி வைக்கப்பட்ட அந்தப் பாத்திரங்கள், அந்த முழுஇரவு வேளையிலும் தூதுகளால் மாசுபடிந்திருக்கும், ஆகவே அதை மீண்டும் கழுவினார். அதுபோல நாம் நமது மனதையும் உடலையும் எவ்வளவு தூய்மையாக வைத்திருந்தாலும் நம்மைச்சுற்றி நடக்கின்ற நிகழ்வுகள் நம்மை மாசடையச் செய்து கொண்டேயிருக்கும். ஆகவே ஒவ்வொரு நிமிடமும், வினாடியும் நம்மை சுத்திகரித்துக் கொண்டேயிருக்க வேண்டும், இறந்து, உயிர்த்து புதுமனிதனாக்கும் பணியை நாம் மீண்டும் மீண்டும் செய்து கொண்டேயிருக்க வேண்டும். இந்தத் தொடர் புனிதச் செயலே நம்மை மாசு மறுவின்றி வைத்திருக்க உதவும்.

நான் நல்லவன், என்னிடம் எந்த தவறும் இல்லை என்ற எண்ணம் தான் பரிசுத்த ஆணவம், அகங்காரம். இன்று அதுவே மிகப்பெரிய பாவம்.

இன்றைய நவீன டிஜிட்டல் உலகம் நமக்குள் குப்பைகளை நிரப்பிக் கொண்டேயிருக்கின்றது. நம்மை இக்காலம் குப்பைத் தொட்டியாக்கியுள்ளது. எதுவும் தவறில்லை இந்த பிடித்துக் கொள் என்று அனைத்து தவறாதையும் இலவசமாக நமக்குள்ளும் நம்மைச் சுற்றியும் கொட்டிக்கொண்டேயிருக்கின்றது.

இவற்றிலிருந்து நம்மை காப்பாற்றிக் கொள்ள வேண்டியது நமது கடமையாகும். இல்லை என்றால் நாமும் இந்த நரகத்தில் விழுந்து விடுவோம். பரிசுத்தவானாக நாமே நினைத்துக் கொண்டிருப்போம், இறுதிக் காலத்தில் உங்களை எனக்குத் தெரியவே தெரியாது என்று இறைவன் கூறிவிடுவார்.

திருப்பலியில் எந்தவித பாவ அச்சமோ இல்லாமல், ஒப்புரவு அருட்சாதனமே பெறாமல் திருவிருந்து உட்கொள்ளும் அரக்க குணமுள்ள கொடூர, கத்தோலிக்க சமூகமே இதற்கு ஓர் உதாரணம். திருப்பலிக்கு பாதியில் வந்தாலும் திருவிருந்து பெறுவதை தவறாகக் கருதக் கூடாது அவர்கள் திருப்பலிக்கு வருவதே பெரிய காரியம் என்ற எண்ணம், இன்றைய கொடூர நிலையையே படம் பிடித்துக் காட்டுகின்றது.

உணரும் உள்ளமுடையோர் உணரட்டும்.





# விவிலியம் அறிவோம் – 36

அருட்பணி. ஆ.அலெக்ஸ் CMF

## யாக்கோபின் திருமணமங்கள்

யாக்கோபுபெத்தேலைவிட்டுபதான் அராமுக்குத்; தன் பயணத்தைத் தொடர்கிறார். பதான் அராமின் இன்னொருபெயர்காரான். யாக்கோபு காரானை நெருங்குகையில் வயல்வெளியில் ஒருகிணற்றையும் அதைச் சுற்றி ஆட்டுமந்தைகள் கிடப்பதையும் பார்க்கிறார். கிணற்றின் வாயில் ஒரு பெரிய கல்லால் மூடப்பட்டிருக்கிறது. மந்தைகள் எல்லாம் ஒன்றுசேர்ந்தபின் இடையர்கள் கல்லைப் புரட்டி, அவை குடித்து முடிந்ததும், மறுபடியும் கல்லைக் கிணற்று வாயின்மேல் தூக்கிவைப்பது வழக்கம் என ஆசிரியர் பதிவு செய்கிறார். கிணற்றின் வாயிலைக் கல்லால் மூடுவதற்குப் பல காரணங்கள் இருந்தன. தண்ணீர் பற்றாக்குறையுள்ள திறந்தவெளிப் பகுதிகளில் இருக்கும் தண்ணீரைப் பாதுகாத்து பகிர்ந்துகொள்வது அவசியமாக இருந்தது. கிணற்றின் வாயிலை மூடுகின்றகல் பல பணிகளைச் செய்கிறது. முதலாவது, தண்ணீர் கெட்டுப்போகாமல் பாதுகாக்கிறது மற்றும் பகைவர்கள் நஞ்சு கலந்துவிடாமல் காக்கிறது. இரண்டாவது, அங்கே வருகின்ற இடையர்கள் தங்களுக்கு உரிமையான தண்ணீருக்கும் அதிகமாக எடுத்துவிடாமல் தடுக்கிறது. மூன்றாவது, கிணற்றைச் சுற்றிச் சுவர்கள் இல்லாமல் இருப்பதால் வழிப்போக்கர்களோ, அவ்வழியாக வருகின்ற விலங்குகளோ தவறி கிணற்றில் விழுந்து விடாமல் பாதுகாக்கிறது. யாக்கோபு அங்கிருந்த இடையர்களுடன் உரையாடுகிறார் அவர்கள்; காரானிலிருந்து வருபவர்கள் என்பதை அறிந்த யாக்கோபு அவர்களிடம் தன்னுடைய மாமானார் லாபானைப் பற்றி விசாரிக்கிறார். அவர்கள் அவரிடம் அவரை எங்களுக்குத் தெரியும் என்றும் அவர் நலமாக இருப்பதாகவும், லாபானின் மகள் ராகேல் தன் ஆடுகளை ஓட்டிக்கொண்டு அங்கே வருவதாகவும் கூறுகின்றனர். அவர்கள் பேசிக் கொண்டிருக்கையில் ராகேல் தனது தந்தையின் ஆடுகளை ஓட்டிக்கொண்டு அங்கே வருகின்றாள்.

ராகேல் ஆடுமேய்ப்பவளாக இங்கே காட்டப்படுகின்றாள். பண்டைய மேற்காசியாவில் ஆண்கள்தான் இடையர்களாகச் செயல்படுவது வழக்கம். ஆனால் ஆண் குழந்தைகள் இல்லாத குடும்பத்தில் பெண்கள் இடையர்களாகப் பணிசெய்வது வழக்கத்திலிருந்தது. ராகேல் தனது தாய்மாமன் லாபானின் மகள் என்பதையும், அவள் ஓட்டிவந்த மந்தைகள் தனது தாய் மாமனின் மந்தைகள் என்பதையும் அறிந்த யாக்கோபு கிணற்றை மூடியிருந்த கல்லைப் புரட்டி அவள் ஓட்டிவந்த ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டுகின்றார். அதன்பின் தன்னை ராகேலுக்கு அறிமுகப்படுத்தி அவளை முத்தமிடுகின்றார். யாக்கோபின் இச்செயல்கள் ராகேல் தனது தாய்மாமன் மகள் என்பதால் செய்யப்பட்ட செயல்களாக இருக்கலாம்; அல்லது ராகேலின் மீது யாக்கோபு கொண்ட காதலால் இருக்கலாம். இந்தக் கதையில் நாம் காணும் பல கூறுகள் ஆபிரகாம் ஈசாக்கிற்காக பெண்தேடி அனுப்பிய வேலைக்காரரின் அனுபவத்தை ஒத்ததாக இருக்கிறது. அவரும் காரானுக்கு அருகில் உள்ள ஒரு கிணற்றடியில்தான் ரெபேக்காவைச் சந்திக்கின்றார். ரெபேக்காவுடனும், அதன்பின் அவளது சகோதரனான லாபானுடனும் பேசி ரெபேக்காவை ஈசாக்கிற்கு மனைவியாக அழைத்துச் செல்கின்றார். ஆனால் இரண்டு நிகழ்வுகளுக்கும் சில வித்தியாசங்களும் உள்ளன. ஆபிரகாமின் வேலைக்காரர் பல பணியாளர்களுடனும் பரிசுப்பொருட்களுடனும்

வந்திருந்தார். யாக்கோபு தனிமனிதனாக, தன் சகோதரனுக்கு பயந்து ஓடியவனாக வந்திருக்கிறார். ஆபிரகாமின் வேலைக்காரர் முதலில் ரெபேக்காவிற்கும் அதன்பின் அவளுடைய குடும்பத்தினருக்கும் ஏராளமான பரிசுகளை கொடுத்தார். யாக்கோபிடம் பரிசுகள் கொடுப்பதற்கு ஒன்றுமில்லை. எனவே தனது உழைப்பைக் கொடுக்கின்றார். ஆபிரகாமின் வேலைக்காரர் ரெபேக்காவிடம் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டார்; யாக்கோபு இராக்கேலின் ஆடுகள் குடிப்பதற்கு கிணற்றை மூடியிருந்த பெரியகல்லைப் புரட்டி உதவி செய்கின்றார்.

யாக்கோபு தனது உறவினர் என்பதை அறிந்த ராகேல் உடனே தன் வீட்டிற்கு ஓடிச்சென்று தனது தந்தையிடம் அதைக் கூறுகின்றார். தனது சகோதரியின் மகன் வந்திருக்கிறான் என்பதைக் கேள்விப்பட்ட லாபான் யாக்கோபைச் சந்தித்து அவனை வீட்டிற்கு அழைத்துச் செல்கின்றார். அவர்களின் நல விசாரிப்பிற்குப் பின் யாக்கோபு அங்கேயே தங்கிவிடுகின்றார். யாக்கோபு தனது தாய்மாமனாகிய லாபானின் ஆட்டுமந்தைகளைப் பராமரிக்கும் பணியைச் செய்கின்றார். ஒருமாதம் சென்றுவிடுகிறது. அதன்பின் சம்பளம் பற்றிய பேச்சுவருகிறது. லாபான் யாக்கோபை நோக்கி, நீ என் உறவினன் என்பதற்காக ஒன்றும் வாங்காமல் எனக்கு வேலை செய்யலாமா? சம்பளம் எவ்வளவு கேட்கிறாய்? சொல் எனக் கேட்கின்றார். யாக்கோபு லாபானிடம் பணம் எதுவும் கேட்கவில்லை. மாறாக உம் இளைய மகள் ராகேலுக்காக ஏழு ஆண்டுகள் உம்மிடம் வேலை செய்கிறேன் என்கிறார். பண்டைய மேற்காசிய நாடுகளின் கலாச்சாரத்தில் பெண்களை மணப்பதற்கு மணமகன் மணமகளுக்கு அல்லது மணமகள் வீட்டாருக்குப் பரிசுகள் கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுக்கப்பட்ட பரிசுகள் பணமாகவோ, பொன் மற்றும் வெள்ளி போன்ற பொருள்களாகவோ இருந்தன. இந்தப் பரிசுகள் பெண் வீட்டாருக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் ஒன்றாக இருந்தது. கணவன் இறந்துவிட்டாலோ, அவளை மணமுறிவு செய்துவிட்டாலோ அவளுடைய வாழ்விற்கு உதவியாக இந்தப் பரிசுகள் இருக்கும். சில நேரங்களில் இந்தப் பரிசுகள் பெண் வீட்டாரால் வரதட்சணையாக திருப்பிக் கொடுக்கப்பட்டன. யாக்கோபு காரான் வரும்போது தன்னுடன் எதுவும் எடுத்து வரவில்லை. எனவேதான் ராகேலை மணம் புரிவதற்காக ஏழு ஆண்டகள் உழைப்பைத் தருவதாகக் கூறுகின்றார். நூசி என்ற இடத்தில் நடந்த அகழ்வாராய்ச்சிகளில் கிடைத்த சில ஆவணங்களின் படி மணமகன் மணமகள் வீட்டாருக்கு முப்பது அல்லது நாற்பது செக்கேல் வெள்ளி கொடுக்க வேண்டும். ஒரு இடையன் ஓராண்டு பணிசெய்தால் பத்து செக்கேல் வெள்ளி கிடைக்கும். அப்படிப் பார்த்தால் யாக்கோபு



கொடுப்பது அதிகமான தொகைதான். அவர் ராகேலுக்காக ஏழு ஆண்டுகள் வேலை செய்வதாகக் கூறியிருக்கிறார்.

யாக்கோபின் வேண்டுதலுக்கு லாபான் சம்மதிக்கின்றார். யாக்கோபும் அங்கே தங்கி லாபானின் ஆட்டுமந்தைகளை மேய்க்கும் பணியைச் செய்கின்றார். யாக்கோபு ஏழு ஆண்டுகள் லாபானுக்காக உழைத்தபின், தங்களது ஒப்பந்தத்தின்படி, ராகேலைத் திருமணம் செய்துவைக்க லாபானிடம் கேட்கிறார். லாபானும் அதற்கு உடன்பட்டு திருமணவிழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்கின்றார். பொதுவாக திருமணவிழா இரண்டு குடும்பங்களுக் கிடையே செய்யப்படுகின்ற ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் நடக்கிறது. ஒரு பெரிய விருந்துடன் அந்தவிழா முடிவுபெறும். விழாமுடிவில் மணமகனும் மணமகளும் அவர்களின் வீட்டிற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவர். அங்கே மணமக்களின் முதலிரவு நடக்கும். திருமணவிழா ஊர்வலத்தின்போது மணமகள் தன் முகத்தை மறைத்து திரையிட்டிருப்பார். மேலும் திருமணவிருந்தின்போது திராட்சை இரசமும் பரிமாறப்படும். எனவே மணமகனும் விருந்தினர்களும் மதுபோதையிலும் இருக்கலாம். இந்தச் சூழலில்தான் லாபான் தனது மூத்தமகள் லேயாவை ராகேலுக்குப் பதிலாக யாக்கோபிற்கு மணமுடித்து வைக்கிறார். யாக்கோபும் அவளைத் தனது மனைவியாக்கி அவளுடன் உறவு கொள்கிறார். அடுத்தநாள் காலையில் தான் ஏமாற்றப்பட்டுவிட்டதைக் காண்கின்றார். ராகேலுக்குப் பதிலாக அவளது மூத்த சகோதரியான லேயா தனக்கு மனைவியாகக் கொடுக்கப்பட்டதை அறிந்து லாபானிடம் ஏன் என்னை ஏமாற்றினீர்? எனக் கேட்கின்றார்.



லாபான் யாக்கோபை ஏமாற்றியதற்கு அவர்கள் நடுவில் இருக்கும் மரபொன்றைக் காரணமாகக் கூறுகிறார். அதாவது மூத்தவள் இருக்க இளையவளைக் கொடுப்பது எங்கள் ஊர் வழக்கமில்லை என்கின்றார். மேலும் யாக்கோபு ராகேலையும் மணப்பதற்கு ஒருவழியைக் கூறுகின்றார். நீ இவளோடு ஏழு நாள்களைக் கழி. இன்னும் ஏழாண்டுகள் என்னிடம் வேலை செய்தால் அவளையும் உனக்குக் கொடுப்பேன் என்கின்றார்.

புதிதாக மணமான தம்பதிகள் ஏழு நாட்கள் ஒன்றாக இருக்க வேண்டும் என்ற மரபு அவர்களிடையே இருந்தது. இந்த நாட்கள் மணமக்களின் வாரம் என்றழைக்கப்பட்டது. ஏழு நாள்களில் கடவுள் உலகைப் படைத்தார் என விவிலியம் கூறுகிறது. திருமண உறவும் புதுவாழ்வைப் படைப்பதற்காக உருவாக்கப்படும் உறவு. இவையிரண்டிற்கும் உள்ள உறவில் உருவானது தான் இந்த மணமக்கள் வாரம். மேலும் புதிதாக திருமணமான தம்பதியர் வேறு வேலைகளைத் தவிர்க்க வேண்டும்; மணமகள் விரைவில் கருத்தரிக்க வேண்டும் என்பதும் ஒருகாரணமாக இருந்தது. லாபானின் விருப்பத்திற்கு யாக்கோபு உடன்படுகின்றார். யாக்கோபு லேயாவுடன் ஏழு நாள்களைக் கழித்த பின் லாபான் தன் மகள் ராகேலையும் யாக்கோபிற்கு மனைவியாகக் கொடுக்கின்றார். தனது இரண்டு மகள்களுக்கும் பணி செய்வதற்காக பணிப் பெண்களையும் கொடுக்கின்றார். அதன்படி லேயாவின் பணிப் பெண்ணாக சில்பாவும் ராகேலின் பணிப் பெண்ணாக பில்காவும் வருகின்றனர். திருமணத்தின் போது பணிப் பெண்களைப் பரிசாகக் கொடுப்பது அக்காலத்தில் பொதுவான பழக்கமாக இருந்தது. இதன் வழியாக மணமகள் தனக்கென ஒருவீட்டை உருவாக்க முடியும். அவளுடைய கடமைகளை நிறைவேற்றுவதற்கு உதவிகள் புரிய முடியும். இன்னும் சமூகத்தின் பார்வையில் அவள் மதிப்பிற்குரியவளாக இருக்கமுடியும். யாக்கோபு தனது இரு மனைவியருக்காகவும் பதினான்கு ஆண்டுகள் லாபானுக்குப் பணிசெய்கிறார். இந்தக் காலகட்டத்தில் லாபான் யாக்கோபிற்கு எந்த சம்பளத்தையும் கொடுத்ததாகத் தெரியவில்லை. யாக்கோபின் திருமண நிகழ்வுகள் நம் வாழ்விற்கு பல செய்திகளைத் தரலாம். இரண்டு செய்திகளை


உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

முதலாவதாக, யாக்கோபு ராகேலைத் திருமணம் புரிவதற்காகத்தான் ஏழு ஆண்டுகள் லாபானுக்கு வேலைசெய்வதாக ஒப்பந்தம் செய்கின்றார். இதைப் பதிவுசெய்கின்ற ஆசிரியர், அப்படியே யாக்கோபு ஏழாண்டுகள் ராகேலை முன்னிட்டு வேலை செய்தார். ஆனால் அவர் அவள்மீது வைத்திருந்த அன்பின் மிகுதியால் அது அவருக்குச் சிலநாட்களாகவே தோன்றியது எனக் கூறுகின்றார். அன்பின் மகத்துவத்தை இந்தவரிகள் வெளிப் படுத்துகின்றன. அன்பு அனைத்தையும் பொறுத்துக்கொள்ளும் (1 கொரிந் 13:7) என்கிறார்புனிதபவுல். ஒருகுழந்தையைப் பெற்றுவளர்க்கும் தாய்க்கு குழந்தையால் ஏற்படுகின்ற துன்பங்கள் ஒரு சுமையாக இருப்பதில்லை. யாக்கோபு ராகேலை அன்பு செய்தார்; அவளை தன் மனைவியாக அடைய வேண்டுமென விரும்பினார். அதற்காக ஏழு ஆண்டுகள் தன் மாமனாரிடம் வேலைக்காரனாக செயல்பட முன்வருகிறார். அதைமகிழ்ச்சியோடு செய்கிறார். சுயநலமற்ற அன்பு சுமைகளைக் குறைக்கிறது. நமது வாழ்விலும் இதை நாம் அனுபவிக்க முடியும். நமது பெற்றோர், பிள்ளைகள், உற்றார் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரிடம் உண்மையான அன்பு கொண்டு செயல்பட்டால் நாம் துன்பங்களுக்கு அஞ்சமாட்டோம்; அவர்களுக்கு ஆதரவாக இருக்கத் தயங்கமாட்டோம். அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு என்பது தெய்வப் புதல்வர் திருவள்ளுவர் வாக்கு. அன்பில் நிலைத்திருப்போம்; ஆனந்தமாய் வாழ்வோம்.

இரண்டாவது,யாக்கோபின் உழைப்பு நமக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. ராகேலைத் திருமணம் செய்வதற்காக யாக்கோபு பதினான்கு ஆண்டுகள் லாபானுக்காக உழைக்கிறார். யாக்கோபின் தந்தை ஈசாக்கு பெரிய செல்வந்தராகவே இருந்தார். ஈசாக்கு கெராரில் இருந்தபோது, அந்தநாட்டில் பயிரிட்டு அதே ஆண்டில் நூறுமடங்கு அறுவடை செய்தார். ஆண்டவர் அவருக்கு ஆசிவழங்கினார். அவர் செல்வமுடையவர் ஆனார். செல்வத்திற்குமேல் செல்வம் பெற்று மாபெரும் செல்வரானார். மேலும் அவருக்கு ஆட்டு மந்தையும் மாட்டு மந்தையும் இருந்தன. வேலைக்காரர் பலர் இருந்தனர். எனவே பெலிஸ்தியர் அவர்மீது பொறாமை கொண்டனர் (தொநூ 26:12-14) என வாசிக்கிறோம். அங்கிருந்து பெயேர் செபாவில் சென்று வாழ்ந்த போதும் அவர் செல்வந்தராகவே இருந்தார். பெயேர் செபாவிலிருந்துதான் யாக்கோபு பதான் அராம் என்ற காரனுக்கு வந்தார். எனவே அவர் நினைத்திருந்தால் தனது தந்தையிடமிருந்து செல்வம் பெற்று ராகேலைத் திருமணம் செய்வதற்குத் தேவையான பணத்தைக் கொடுத்திருக்க முடியும். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. தன் உழைப்பின் மீது நம்பிக்கை கொண்டவராக இருக்கின்றார். அந்த உழைப்புதான் அவரது வாழ்வை உயர்த்துகிறது. இன்றைய நமது சமூகத்தில் உழைக்காமல் உயர நினைக்கும் ஒரு கூட்டம் உள்ளது. சமூகத்தில் காணப்படும் பல தீமைகளுக்கு இத்தகையோரே காரணமாக உள்ளனர். யாக்கோபின் கதை உழைப்பின் மீதுள்ள நம்பிக்கையை நம்மில் உறுதிப்படுத்த வேண்டும். உழைப்பே நம்மை உயரவைக்கும் என்ற உண்மையை நம் உள்ளத்தில் பதிக்கவேண்டும்.

பயணம் தொடரும்,

அருட்பணி. **ஆ. அலெக்ஸ்** CMF





# மறையுரை


அருட்பணி. ராபர்ட்
உதவி பங்குத்தந்தை,
புனித பெரிய அந்தோணியார் திருத்தலம்
மாரம்பாடி, திண்டுக்கல்.


**பாஸ்கா காலத்தின் மூன்றாம் ஞாயிறு**

**01-05-2022**

**திப 5 : 27-32 / தி.வெ. 5 : 11-14 / யோவா. 21 : 1 - 19**

## கண்டுகொள் - முதிர்ச்சி பெறு

உயிர்த்த இயேசுவைக் கண்டபின் சீடர்கள் உலகெங்கும் சென்று நற்செய்தி அறிவிக்கும் உயிர்சாட்சிகளாக விளங்கினர். அவர்களுக்குள் இருந்த பெரியவன் சிறியவன் என்ற வேறுபாடுகள், வலப்பக்கத்திலும் இடப்புறத்திலும் அமரத்துடிக்கும் போட்டி பொறாமைகள், வானிலிருந்து நெருப்பை வரச்சொல்லி பிறரை எரிக்கத்துடிக்கும் வன்முறை உணர்வுகள், அந்த ஆளை எனக்குத் தெரியாது என்ற கோழைத்தனம், பிற இனத்தார் மீது கொண்ட ஏளனங்கள், சிறுவர்களைத் துரத்தும் சிறுமை உணர்வுகள் போன்றவை மறைந்து போயின. பயந்து ஓடியவர்கள் துணிவுடன் நற்செய்தி அறிவிக்கத்துவங்கினர். அவர்களைத் தேடி போர்கள் வந்தன. கடவுள் ஆட்சியை உலகின் கடையெல்லை வரை அறிவிக்கும் வரை அவர்களின் கால்கள் ஓய்வெடுக்கவில்லை. இயேசுவைப்போல மரிக்க எங்களுக்கு தகுதியில்லை என இரத்த சாட்சிகளாக மாறிப்போயினர். காரணம் இயேசுவை கண்டுகொண்டு முதிர்ச்சிப்பெற்றதேயாகும்.

ஒட்டப்பந்தயத்தில் சிறுவன் ஒருவன் எப்பொழுதுமே வெற்றி பெறுவான். அந்த நகரத்தில் நடக்கவிருந்த போட்டியில் கலந்துகொள்ள ஆயத்தமாவான். ஊரிலிருந்த சக சிறுவர்களையெல்லாம் அழைத்து அவனோடு போட்டி வைத்தான். இந்த சிறுவர்கள் பங்கேற்கும் ஓட்ட பந்தயத்தைக் காண மக்கள் திரண்டிருந்தனர். முதியவர் ஒருவரும் அந்தப் போட்டியைக் காணச் சென்றிருந்தார். போட்டியானது ஆரம்பித்தது, சிறுவனோ மின்னல் வேகத்தில் இலக்கை அடைந்தான். மக்கள் கரவொலி எழுப்பி வாழ்த்தினார்கள், சிறுவனை பாராட்டினார்கள், இரண்டாவது பந்தயமும் ஆரம்பாமானது, சிறுவனோ தன்னைவிட வயதினில் மூத்தவர்களையும் பலசாலிகளையும் களம் இறக்கிப் பார்த்தான். போட்டியானது ஆரம்பித்தது, சிறுவனோ சீறிப்பாய்ந்து இலக்கை அடைந்தான். மக்கள் கரவொலி எழுப்பி வாழ்த்தினார்கள். சிறுவனைப் பாராட்டினார்கள். முதியவர் எழுந்து வந்தார். சிறுவனை பாராட்டினார். பார்வையற்ற சிறுவனோடும், வயது முதிர்ந்த பாட்டியோடும் சிறுவனை ஓட அழைத்தார். போட்டியானது ஆரம்பித்தது. சிறுவன் அதிவேகமாக ஓடி இலக்கை அடைந்தான். ஆனால் எவரும் கைகள் தட்டவில்லை. சிறுவனையும் அவர்கள் பார்க்கவில்லை. முதியவரோ சிறுவனை அழைத்து இவர்களது கரங்களோடு கரமிணைத்து இலக்கினை அடையச் செய்தார். கூட்டம் முழுவதும் கண்ணீரோடு கரம் தட்டியது.

இச்சிறுவன் இலக்கை, வெற்றியை, தன்திறமையை மட்டும் நோக்கி பயணித்தபோது, அனைவரும் அவனை பாராட்டியபோதும் கூட அது அவனுக்கு ஆனந்தத்தை, மகிழ்ச்சியை, நிறைவை, முதிர்ச்சியைத் தரவில்லை. எப்பொழுது அவன் பிறரை கண்டு கொள்கின்றானோ அப்பொழுது முதிர்ச்சி பெறுகிறான்.

பேதுருவின் வாழ்வில் இக்கருத்தை நாம் தெள்ளத்தெளிவாக காணமுடியும். முதிர்ச்சி என்ற நிலை அறவே இல்லாத பேதுரு இயேசுவை கண்டு முதிர்ச்சி பெறுகிறார். பேதுருவின் பலவீனத் தன்மையை நாம் நற்செய்திகளிலிருந்து தெளிவாக அறிந்து கொள்ள முடியும். இயேசுவை கண்டு கொண்ட தருணம் அவர் முதிர்ச்சி பெற்று, தான் பெற்ற முதிர்ச்சியை பிறருக்கு தரக்கூடியதை திருத்தூது பணிகளில் காண்கின்றோம். பெந்தகோஸ்து நாளிலே தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு தலைவராகவும், நற்செய்தியை உரைப்பவராகவும் 120 பேருக்கு உரைக்கின்றார். புனித பவுலைப் போல தனது திருத்தூதுப் பயணத்தை பல இடங்களுக்கு மேற்கொள்கின்றார். அவரின் வருகையால் பலரும் அதிசயங்களையும், அற்புதங்களையும் பெற்றவர்களாகவும், மக்கள் இயேசுவை அறிந்து மனமாறவும் உதவிபுரிகின்றார். முதிர்ச்சி பெற்ற பேதுரு சோதனைக்குட்பட்டபோதும், கைது

செய்யப்பட்ட போதும், அடித்து நொருக்கப்பட்ட போதும் அனைத்து துன்பங்களுக்கு மத்தியிலும் தன்நிலை அறிந்தவராக நிலைத்து நின்றார். திருத்தூதர்களின் தலைமை திருத்தூதனாய், எப்பொழுது எல்லாம் முடிவெடுக்க வேண்டிய சூழ்நிலை வந்ததோ அப்பொழுது தலைமைப்பண்பு நிறைந்தவராய் முடிவுகளை எடுக்கின்றார். தன் அனுபவங்களை விவிலியத்தில் இரண்டு ஆகமங்களாக எழுதுகின்றார். இயேசுவோடு சதா பயணித்த பேதுரு அவரின் விழுமியங்களை கண்ணிருந்தும் குருடராக காணாமல் இருந்தார். உயிர்த்த இயேசுவை கண்டு கொண்ட பின்னே முதிர்ச்சி பெற்றவராய் அவரின் விழுமியங்களை நற்செய்திகளாக எத்திசைக்கும் எடுத்துச் சென்றார். கண்டுகொண்டு முதிர்ச்சிபெற இறைவன் நம்மை அழைப்பது; வெறுமனான அழைப்பு அல்ல. மாறாக 2திமொ 1:8ல் சொல்லப்பட்டிருப்பது போல இயேசு துன்புற்றதை போல துன்புறுவதற்கான அழைப்பு. அது எதற்கெனில் நற்செய்திக்காக அவருக்கு சாட்சி பகரவே.

அந்த சாட்சிய வாழ்வை தான் பேதுரு கையில் எடுக்கின்றார். சமுதாயத்தில் எளியவர்களை அதாவது சிறைப்பட்டவர்களை, ஞான ஒளி அற்றவர்களை, ஒடுக்கப்பட்டவர்களை, சபிக்கப்பட்டவர்களை, பாவிகளை, புறக்கணிக்கப்பட்டவர்களை, ஏழைகளை, தேர்ந்தெடுத்து அவர்களில் இயேசுவைக்கண்டு அவர்களுக்காக பாடுபடுவதில் துன்புறுவதில் உயிரைக்கொடுக்க முன் வருவதில் உயிரைக்கொடுப்பதில் தான் இயேசுவின் நற்செய்தி அடங்கியிருக்கிறது. அவருக்கு சான்று பகரும் வாழ்வு மறைந்திருக்கிறது. அதுவே முதிர்ச்சியாகும். இறைவனின் நற்செய்திக்காக பொது நன்மைக்காக, பிறருக்காகப் பாடுபட்டால் இறைவன் அனைத்துத் துன்பங்களிலும் நம்மோடிருந்து நமக்கு மனநிறைவு தருவார்; என்பதற்கு எடுத்துக்காட்டாக இன்றைய முதல் வாசகத்தில் தலைமைக்குரு சிறைக்கு செல்வீர்கள் என எச்சரித்த பிறகும் கூட மகிழ்ச்சியாக இருக்கும் சீடர்கள் தங்களின் முதிர்ச்சியை வெளிப்படுத்துகின்றனர். இன்றைய இரண்டாம் வாசகத்திலும் வரக்கூடிய ஒவ்வொரு வார்த்தையும் யோவானின் முதிர்ச்சியை காட்டுகின்றன.

அன்பிற்கினியவர்களே நாம் நம்முடைய வாழ்வில் இயேசுவை கண்டு கொண்டு முதிர்ச்சி பெற்றிருக்கிறோமா? என சுய ஆய்வு செய்து பார்த்தால் தெரியும் முதலில் நாம் இயேசுவை கண்டு உணர தவறியிருப்போம். பின்பு எப்படி நம்மால் ஆன்மீக முதிர்ச்சி பெற முடியும்? நாம் எப்பேர்பட்ட தகுதியற்ற நிலையிலிருந்தாலும் நம்மால் இயேசுவை கண்டு உணர முடியும். அவரைக்கண்டு உணர்ந்தால் நம் வாழ்வில் ஆன்மீக முதிர்ச்சி சாத்தியமே.





# பாஸ்கா காலத்தின் மூன்றாம் ஞாயிறு

தி.ப.5:27-32, 40-41, தி.வெ.5:11-14, யோவா. 21:1-19

**01-05-2022**



பா. சேவியர்
பட்டாபிராம், சென்னை.

## திருப்பலி முன்னுரை

கலங்காதே, திகையாதே நான் உன்னோடு இருக்கிறேன் என்ற இயேசுவின் மீது நம்பிக்கை வைத்து திடம் பெற வருகை தந்துள்ள உங்கள் அனைவரையும் பாஸ்கா காலத்தின் மூன்றாம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

உயிர்த்த இயேசுவின் உடனிருப்பை வாழ்க்கையில் உணர்ந்து பார்க்கின்ற ஒப்பற்ற நேரங்களைப் பற்றி அறிந்து கொள்ள இன்றைய திருவழிபாட்டின் வாசகங்கள் வாய்ப்பைத் தருகின்றன.

என்னை அன்பு செய்கிறாயா? என்று அன்று புனித பேதுருவைக் கேட்ட உயிர்த்த இயேசு இன்று நம் ஒவ்வொருவரையும் பார்த்து கேட்கிறார், அந்தக் கேள்விக்கு நமது பதில் என்ன? என்பது குறித்து இன்றைய வழிபாட்டின் வழியாக சிந்திக்க நாம் அழைக்கப்படுகிறோம்.

இயேசுவை அன்பு செய்ய விடாமல் யூதாஸைத் தடுத்தது பண ஆசை, பிலாத்துவை தடுத்தது பதவி ஆசை, ஏரோதை தடுத்தது உடல் ஆசை, பேதுருவை தடுத்தது உயிர் ஆசை, இந்த நான்கு ஆசைகளை வெல்பவனே இயேசுவை அன்பு செய்கிறான்.

இயேசுவின் சிலுவைச் சாவால் சோர்ந்து போய் குழப்பமான நிலையில் தங்களது மீன்பிடி தொழிலுக்கே திரும்ப முயன்ற தன் சீடர்களை சந்தித்து புதிய நம்பிக்கையை விதைத்து, அன்புணர்வூட்டி, திருத்தூது பணிக்கு அனுப்பும் அற்புத செயலை படம் பிடித்து காட்டுகிறது இன்றைய வார்த்தை வழிபாடு.

இன்று மே முதல் நாள். உலக தொழிலாளர் தினம். ஏழையாகப் பிறந்தாலும் ஏற்றமிகு வாழ்வு வாழ்ந்தவரும், துன்பத்தில் துவண்டாலும் தூய்மையான வாழ்வு வாழ்ந்தவரும், கஷ்டங்களுக்கு மத்தியிலும் கண்ணியமான வாழ்வு வாழ்ந்தவருமான புனித சூசையப்பர், தன் மனைவி மரியாளையும் தன் வளர்ப்பு மகன் இயேசுவையும் தனது கடின உழைப்பால் பராமரித்து வந்தார். அதனால்தான் அவரை தொழிலாளர்களின் பாதுகாவலராக கொண்டாடி மகிழ்கிறோம். இறைவனின் படைப்புத் தொழிலின் பங்காளிகளான தொழிலாளர்கள் எல்லா உரிமைகளையும், எல்லா நன்மைகளையும் பெற்று மகிழ இறையருளை வேண்டுவோம்.

சாப்பிட வாருங்கள் என்று சீடர்களை அழைத்ததை போல் இன்று இத்திருப்பலி வழியாக நம்மையும் அழைக்கிறார். செம்மறியின் விருந்துக்கு அழைக்கப் பெற்ற நாம் பேறு பெற்றவர்கள் என்ற பெருமிதத்துடன் இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

இயேசுவின் பெயரைச் சொல்லி போதிக்கலாகாது என்று கட்டளையிட்ட யூதத் தலைமைச் சங்கத்திற்கே இயேசுவின் பாடுகள் மரணம், உயிர்ப்பு என்ற முப்பெரும் நிகழ்ச்சிகளை திருத்தூதர்கள் பறை சாற்றுவதை விவரிக்கிறது இன்றைய முதல் வாசகம். அதிகாரத்திற்கு அஞ்சாமல், மனிதனுக்கு கீழ்படிவதைவிட கடவுளுக்குக் கீழ்படிவதே மேல் என்று துணிச்சலுடன் இயேசுவை அறிக்கையிடுவதை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

செம்மறியின் மாட்சிமைக்கு செலுத்தப்பட்ட வழிபாடு பற்றி சில குறிப்புகளைத் தருகிறது இன்றைய இரண்டாம் வாசகம். விண்ணக மாட்சிமையில் வீற்றிருக்கும் கிறிஸ்து வணக்கமும் வாழ்த்தும் பெறத் தகுந்தவர் எனத் திருத்தூதர் யோவான் எடுத்துரைக்கிறார். இயேசுவிற்கு நான்குலகின் படைப்புகள் அனைத்தும் விழுந்து வணங்கியதை பதிவு செய்யும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) நீ பிறக்கும் முன்பே நான் உன்னை தேர்ந்து கொண்டேன் என்றுரைத்த எம் இறைவா, சமாதானத்தின் தூதர்களாக நற்செய்தியை அறிவித்து மக்களை மன மாற்றத்திற்குத் தயார்படுத்தும் உன்னதப் பணிகளை ஆற்றிவரும் எம் திருத்தந்தை, ஆயர்கள், எம் பங்குத் தந்தையர், அருட்பணியாளர்கள் அனைவரும் நீர் வழங்கிய உமது ஆட்சிப் பணிக்கான அழைப்பில் நிபந்தனையற்ற பங்களிப்பை வழங்கிட அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2) அன்பு இறைவா, தன் வாழ்வில் பல தடுமாற்றங்களையும், தோல்வி களையும் சந்தித்தபின் ஆன்மீக முதிர்ச்சி நிலையை அடைந்த பேதுருவைப் போல் நாங்களும் ஆன்மீக முதிர்ச்சி பெற்று, இயேசுவை முழு மனதோடு அன்பு செய்து ஆன்மீகக் கடமைகளை பொறுப்புடன் நிறைவேற்ற அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3) தலைவர்களுக்கெல்லாம் ஒப்பற்ற தலைவரான தந்தையே இறைவா, எமது நாட்டின் அரசியல் தலைவர்கள், அதிகாரிகள், அரசு ஊழியர்கள் அனைவரையும் உம் திருப்பாதத்தில் சமர்ப்பிக்கின்றோம். அவர்கள் உம்மைப்போல் நேர்மையோடும், நடு நிலையோடும், நீதியோடும் செயல்படவும் மக்கள் நலனையும், நாட்டின் முன்னேற்றத்தையும் மட்டுமே கருத்தில் கொண்டு பணியாற்றவும் அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4) உலகத்தின் முதல் தொழலாளியான அன்பு இறைவா, உலக மயமாக்கல், தாராள மயமாக்கல், தனியார் மயமாக்கல் போன்றவற்றால் நேரடியாக பாதிக்கப்பட்டு துன்புறும் தொழிலாளர்களை நிறைவாக ஆசீர்வதியும். அனைத்து இன்னல் களிலிருந்தும் அவர்களை விடுவித்து காத்து, எல்லா உரிமைகளும் பெற்று வாழ அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## திரு.வி.க.வின் கிறிஸ்து மொழிக் குறள்



**என்பொருட்டுப் பொய்நிந்தை ஏசல் பழிசுமத்தித்**
**துன்புறுத்த, வாழ்வடைந்தீர் சூழ்ந்து.**



எனக்காகப் பொய், இகழ்ச்சி, ஏளனம் செய்தல், குற்றம் சுமத்துதல், துன்புறுத்தல் போன்றவை களை வாழ்வில் அடைவார்களானால் அவர் களை மகிழ்ச்சி சூழ்ந்துகொள்ளும்.

நிந்தை – இகழ்ச்சி, ஏசல் – ஏளனம் செய்தல், பழி – குற்றம்



# வத்திக்கான் செய்திகள்

## குடும்ப வாழ்வின் மதிப்பு மீண்டும் கண்டுணரப்படவேண்டும்

குடும்ப வாழ்வில் இக்காலக்கட்டத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள், மற்றும், நீண்டகாலமாகத் தொடரும் பிரச்சனைகளுக்கு மத்தியில், அவ்வாழ்வின் மதிப்பு, மற்றும், அழகு, மீண்டும் கண்டுகொள்ளப்படவேண்டும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஏப்ரல் 29, இவ்வெள்ளியன்று கேட்டுக்கொண்டுள்ளார்.

**போரின் மனநிலையை அமைதிக்கான திட்டங்களாக மாற்றுங்கள்**

உறவின் பாலங்களை உருவாக்குங்கள், அமைதிக்காக இறைவேண்டல் செய்யுங்கள், அதற்காகப் பணியாற்றுங்கள் : திருத்தந்தை பிரான்சிஸ்

**மாணவர்களிடம்: சந்திப்புக் கலாச்சாரத்தை ஊக்குவியுங்கள்**

நற்செய்தியின் மீட்பளிக்கும் உண்மையை மற்றவரோடு பகிர்ந்துகொள்ளும் வண்ணம், மற்றவரையும், அடுத்திருப்பவரையும் சந்திக்கவேண்டும் திருத்தந்தை பிரான்சிஸ்

**துன்புறுவோருக்கு ஆறுதலளியுங்கள்**

உடலிலோ அல்லது, ஆன்மிகத்திலோ துன்புறும் ஒருவருக்கு அமைதியைக் கொணரும்போது, உங்களுக்கு அமைதி உரித்தாகுக என்று, தம் சீடர்களை வாழ்த்திய உயிர்த்த இயேசுவைச் சந்திக்கின்றோம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

**கடவுளின் எல்லையற்ற இரக்கத்தின் முகத்தைக் காட்டுங்கள்**

கடவுளின் இரக்கத்தைத் தேடுவோரை அன்போடு வரவேற்று, தனிமை மற்றும், கவலையாய் இருக்கும் அவர்களுக்கு, அவரின் ஆறுதலை வழங்குங்கள் – இரக்கத்தின் மறைப்பணியாளர்களிடம் திருத்தந்தை பிரான்சிஸ்

# இந்த வார விவிலிய வாசகங்கள்



## பாஸ்கா காலத்தின் மூன்றாம் ஞாயிறு

### 01.05.2022 – ஞாயிற்றுக்கிழமை

முதல் வாசகம் : திப. 5:27ஆ-32, 40ஆ-41
இரண்டாம் வாசகம் : தி.வெ. 5:11-14
நற்செய்தி வாசகம் : யோவா. 21: 1-19

### 02.05.2022 – திங்கள்கிழமை

முதல் வாசகம் : திப. 6:8-15
நற்செய்தி வாசகம் : யோவா 6: 22-29

### 03.05.2022 – செவ்வாய்கிழமை

முதல் வாசகம் : 1கொரி. 15 : 1-8
நற்செய்தி வாசகம் : யோவா. 14: 6-14

### 04.05.2022 – புதன்கிழமை

முதல் வாசகம் : திப. 8:1ஆ-8
நற்செய்தி வாசகம் : யோவா. 6: 35-40

### 05.05.2022 – வியாழக்கிழமை

முதல் வாசகம் : திப. 8 : 26-40
நற்செய்தி வாசகம் : யோவா. 6:44-51

### 06.05.2022 – வெள்ளிக்கிழமை

முதல் வாசகம் : திப. 9:1-20
நற்செய்தி வாசகம் : யோவா. 6:52-59

### 07.05.2022 – சனிக்கிழமை

முதல் வாசகம் : திப. 9 : 31-42
நற்செய்தி வாசகம் : யோவா. 6:60-69

**The words I have spoken to you they are full of the Spirit and life.**
**- John 6:63**






## ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
## உயிரினும் ஓம்பப் படும்.

அதிகாரம் 14

ஒழுக்கமுடைமை

குறள் – 131

**பொருள் :** ஒழுக்கமே எல்லார்க்கும் மேன்மையைத் தருவதாக இருப்பதால், அந்த ஒழுக்கமே உயிரை விடச் சிறந்ததாகப் போற்றப்படும்.

முன்பு பாவத்திற்கு அடிமைகளாய் இருந்த நீங்கள் பெற்றுக்கொண்ட போதனையில் அடங்கிய ஒழுக்க நெறியை உளமாரக் கடைப்பிடிக்கிறீர்கள். உரோமையர் 6:17

திறமையும், அறிவும் இருந்தால் ஒருவரால் சிகரத்தைத் தொட முடியும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஆனால் ஒழுக்கம் இல்லை என்றால் ஒருவன் எவ்வளவு உயரத்தில் இருந்தாலும் அங்கிருந்து வலுக்கி விழுவதை எவராலும் தடுக்க முடியாது. எனவே அறிவைவிட ஒழுக்கமே முன்னேற்றத்திற்கு மூலதனமாக அமைகிறது என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். இளமைப் பருவம் முதலே நமது பிள்ளைகளுக்கு அறநெறிகளைப் போதித்து ஒழுக்க சீலர்களாக வளர்ப்பது பெற்றோர், ஆசிரியர்களின் முதன்மையான கடமையாகும். இதைத்தான் சமுதாயம் காலம் காலமாக வலியுறுத்தி வருகிறது.

'கல்வியின் நோக்கம் ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுப்பதுதான்' என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

'அப்பா சொன்னார் டாக்டர் ஆக வேண்டும் என்று..

அம்மா சொன்னார் இன்ஜினியராக வேண்டும் என்று...

அண்ணன் சொன்னார் ஆடிட்டர் ஆக வேண்டும் என்று...

அக்கா சொன்னாள் அட்வகேட் ஆக வேண்டுமென்று...

ஆனால் யாருமே சொல்லவில்லை நல்ல மனிதராக வேண்டும் என்று'.... இது ஒரு பிள்ளையின் உள்ள குமுறல்.

ஆக ஒழுக்கமற்ற சமுதாயமாக நமது சமுதாயம் மாறி வருகிறதோ என்ற அச்சம் பலருக்கு மனதில் ஒரு வெறுப்பு உருவெடுக்க தொடங்கிவிட்டது. ஒழுக்கமற்ற வெளிப்பாடுதான் பாலியல் வன்கொடுமைகள், திருட்டு வழிப்பறி கொள்ளைகள்,

போதை பழக்கம் என சிறார் குற்றங்கள் பெருகுவதற்கும், படித்த வாலிபர்கள் அவர்களின் ஒழுக்கமற்ற செயல்களும்தான் உறுதியான காரணமாக கூறுகிறார்கள் சமூக அறிவியலாளர்கள்.

இந்த உலகில் எத்தனையோ அவதாரங்களைப் பற்றி சொல்லுகின்றார்கள். ஆனால் கடவுள் என்று சொல்லுகின்ற அவதாரங்கள் எல்லோருமே உலக வாழ்க்கையில் வாழ்ந்து சென்றிருக்கின்றனர் என்று புராணங்கள் கூறுகின்றன. ஆனால் இதற்கு மாற்றாக, இதற்கு

நேர்மாறாக ஒழுக்க சீலன்களாக வாழ்ந்தவர்கள் அனேக இறைவாக்கினர்கள்.குறிப்பாக எலியா, திருமுழுக்கு யோவான். இவர்களெல்லாம் தங்கள் ஜெபத்தினால் எல்லோரையும் கட்டி எழுப்பினார்கள். அற்புதங்கள் அடையாளங்களால் எல்லாரையும் மலைக்க வைத்தவர்கள்.

இவர்களைப் போலவே, மக்களுக்காக இறைமகன் இயேசு கிறிஸ்து மனித அவதாரத்தை எடுத்து வந்து வாழ்வை எப்படி வாழ வேண்டும் என்பதை நமக்கு முன்மாதிரியாக எடுத்துக் காட்டினார். 30 வயது வரை அன்னை மரியாளுக்கு கீழ்ப்படிந்து மகனாக வாழ்ந்து வந்தார். பின்னர் ஆண்டவர் கட்டளையிட்டபடி மூன்று வருடங்கள் தனது வாழ்க்கையில் பிறருக்காகவே வாழ்ந்து, நற்செய்தியை எடுத்துரைத்து, மக்களை நல்வழிப்படுத்த நமது உயிரையும் ஈந்தார். தமக்கு விருப்பமில்லாத சூழ்நிலையிலும்' உமது சித்தம் நிறைவேற கடவது' என்று பிதாவுக்கு கீழ்ப்படிந்து அவல சாவுக்கு தம்மை அர்ப்பணித்தார். கீழ்படிதல், தூய்மை பிறருக்கு உதவுதல், பிறருக்காக ஜெபித்தல், தூய்மையாக இருந்து ஜெபிக்கும்போது அனைத்தும் நிறைவேறும் என்பதைத் தன்னுடைய வாழ்க்கையில் எடுத்துக் காட்டியவர் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து.

ஆண்டவரின் வார்த்தைக்கு கீழ்படிந்து ஒழுக்கத்தோடு வாழ்கின்ற ஒவ்வொருவருமே நற்பேறு பெற்றவர்கள் ஆகின்றனர்.

நற்பேறு பெற்றவர் யார்? – அவர் பொல்லாரின் சொல்லின்படி நடவாதவர்; பாவிகளின் தீயவழி நில்லாதவர்; இகழ்வாரின் குழுவினில் அமராதவர். ஆனால், அவர் ஆண்டவரின் திருச்சட்டத்தில் மகிழ்ச்சியுறுபவர்; அவரது சட்டத்தைப்பற்றி இரவும் பகலும் சிந்தி ப்பவர்; அவர் நீரோடையோரம் நடப்பட்ட மரம் போல் இருப்பார்; பருவகாலத்தில் கனிதந்து, என்றும் பசுமையாய் இருக்கும் அம்மரத்திற்கு ஒப்பாவார்; தாம் செய்வதனைத்திலும் வெற்றி பெறுவார். (திருப்பாடல்கள் 1:3)

நாமும் இவ்வுலகில் ஒழுக்க சீலர்களாக வாழ்ந்து நற்பேறு பெற்றவர்களாக கடவுளுக்கு உகந்தவர்களாக வாழ்வோம்.

*இயேசுவுக்கே புகழ்*

**-லீமா விக்டோரியா**

# திருவிவிலியத்தோடு திருக்குறளும் படிப்போம்

